# பொதுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2021 - 2022

## மானியக் கோரிக்கை எண்.38

# திரு. மு.க. ஸ்டாலின்

மாண்புமிகு முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2021

## பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | தமிழ் நாட்டிற்கு வருகை புரிந்த மிக முக்கிய விருந்தினர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள் | 7 |
| 3. | அரசு விருந்தினர் இல்லங்கள் | 9 |
| 4. | அயல்நாட்டினர் | 17 |
| 5. | இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வும், தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலனும் | 20 |
| 6. | முன்னாள் படைவீரர்கள் நலன் | 45 |
| 7. | தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) | 67 |
| 8. | மாநில மனித உரிமைகள் ஆணையம் | 71 |
| 9. | தேசிய விழாக்கள், சிறப்பு நாள்கள், விருதுகள் | 73 |
| 10. | முதலமைச்சரின் தனிப்பிரிவு | 76 |
| 11. | உங்கள் தொகுதியில் முதலமைச்சர் | 78 |
| 12. | முடிவுரை | 84 |

# பொதுத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2021-2022

## 1. முன்னுரை

மாநிலத்தின் பொது நிருவாகத்தைக் கையாளும் துறையே பொதுத்துறை என்று அழைக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டிலும், கண் பார்வையிலும் இயங்கும் இத்துறை தலையாயப் பணிகளை மேற்கொண்டு தன்னிகரில்லாத் தலைமைச் செயலகத்தின் தலையாகச் செயல்படுகிறது. பரபரப்பாகவும் சுறுசுறுப்பாகவும் விடுமுறை நாள்களிலும் அயராமல் பணியாற்றி வரும் முக்கியத் துறை இப்பொதுத்துறை.

நிருவாகத்தில் நேர்மை, நுனிக்கொம்பிலும் ஆணி வேரில் திட்டமிடுதலும் இருக்க வேண்டும் என்பதே திறன் மிகுந்த ஆளுகையின் இலக்கணம். இதை உறுதி செய்யும் வகையில் மாநிலத்தின் முக்கியப் பணிகளில் செயல்படும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோரின் பணி அமைப்பை இத்துறையே கையாண்டு வருகிறது.

மாண்புமிகு ஆளுநரின் பதவி ஏற்பு, மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள் ஆகியோரின்

பதவி ஏற்பு ஆகிய மரபுசார் விழாக்களை நடத்தும் பணியை இத்துறையே கவனிக்கிறது. உயர் பெருமக்கள் வருகை புரிகிறபோதெல்லாம் மரபு நெறிகளில் ஏற்பாடுகள் செய்து, பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு, அவர்களைப் புன்னகையோடும் பூங்கொத்தோடும் வரவேற்கிற பெரும் பொறுப்பு இத்துறைக்கு உண்டு. ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தோடும், அயல்நாட்டுத் தூதரகங்களோடும் தொடர்புகொள்ளும் பணியும் இத்துறையால் செவ்வனே செய்யப்படுகிறது. மாவட்ட நீதிபதிகள், உயர் நீதிமன்ற சட்ட அலுவலர்கள் ஆகியோரின் நியமனத்தைத் திறம்படச் செய்கிறது இத்துறை. சென்னையில் உள்ள அரசு விருந்தினர் இல்லத்தையும், அரசு ஓய்வு இல்லத்தையும், உதகமண்டலத்தில் உள்ள தமிழகம் விருந்தினர் இல்லத்தையும், புது டில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தையும் பராமரித்தும், புதுப்பித்தும், ஒதுக்கீடு செய்தும் நிருவகித்து வருகிறது இத்துறை. பொதுத்துறை மேற்கொள்ளும் மற்ற பணிகள் இங்கே பட்டியலிடப்படுகின்றன.

**அயல்நாட்டினர்**

- அயல்நாட்டினர் சட்டம், 1946
- 'இ–சானட்' சேவைத் திட்டம்

**நலன் பேணுதல்**

- மாநிலத்தில் முகாம்களிலும், வெளிப்பகுதிகளிலும் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் நலன் பேணுதல்
- வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்
- முன்னாள் படைவீரர்கள் நலன், அவர்களது குடும்ப நலன், முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் (**Tamil Nadu Ex-Servicemen's Corporation Limited** (**TEXCO**)) நிருவாகம்
- சுதந்திரப் போராட்ட வீரர்கள், முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களுக்காக (**Ex-INA**) ஓய்வூதியம் வழங்குதல், நலப் பணிகளைச் செயல்படுத்துதல்

**மனித உரிமைகள்**

- மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993–ஐ செயல்படுத்துதல், மாநில மனித உரிமைகள் ஆணையம், தேசிய மனித உரிமைகள் ஆணையம் தொடர்பான பணிகள்

**சட்டம்,ஒழுங்கு**

- சட்டம் ஒழுங்கினைப் பராமரித்தல், அது தொடர்பாக விசாரணை ஆணையங்களை அமைத்தல்
- தேசியப் பாதுகாப்புச் சட்டம், (**National Security Act,(NSA)),** 1980 அந்நியச் செலாவணி பாதுகாப்பு, கள்ளக்கடத்தல் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், 1974–ஐ **(Conservation of Foreign Exchange and Prevention of Smuggling Activities Act,(COFEPOSA))** நடைமுறைப்படுத்துதல்

**இராணுவம்**

- தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, பன்மாநிலக்குழு, தென்மண்டலக் குழு உட்பட ஒன்றிய, மாநில அரசுகளுக்கு இடையேயான பொதுவான விவரங்கள் குறித்துக் கவனித்தல்
- இந்தியத் தரைப்படை, கப்பற்படை, விமானப்படை, கடலோரக் காவல்படை ஆகிய இராணுவத் துறைகளுடன் ஒத்துழைப்பு நல்குதல்

**குறைதீர்த்தல்**

- முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் மனுக்கள் மீது உரிய ஆய்வு செய்து தீர்வு காணுதல்
- உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையில் பெறப்படும் மனுக்கள் மீது உரிய ஆய்வு செய்து தீர்வு காணுதல்

**மற்றவை**

- தேசிய விழாக்களான சுதந்திரத் திருநாள், குடியரசுத் தினக் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்
- மாநில அரசின் விருதுகளைத் தகுதியுள்ள நபர்களுக்கு வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ளுதல்
- ஒன்றிய அரசால் வழங்கப்படும் விருதுகளுக்கான தகுதியுள்ள நபர்களைத் தேர்வு செய்து ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை செய்தல்
- அமைச்சரவைக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்

- பொது விடுமுறை மற்றும் உள்ளூர் விடுமுறை அறிவித்தல்
- தலைமைச் செயலகக் கட்டடங்களைப் பராமரித்தல், நிருவகித்தல்
- அரசு விமான போக்குவரத்துப்பிரிவு சம்பந்தமான பணிகளை நிருவகித்தல், கவனித்தல்

## 2. தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த மிக முக்கிய விருந்தினர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள்

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர், மாண்புமிகு இந்தியப் பிரதமர், வெளிநாட்டு அரசின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் பிரமுகர்கள், வெளிநாட்டு அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் / உயர் ஆணையர்கள் ஆகியோர் தமிழ்நாட்டுக்கு வருகைபுரியும் போது மரபு, பாதுகாப்பு ஏற்பாடுகள் பொதுத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், தலைமைச் செயலாளர் ஆகியோருடன் வெளிநாட்டு அமைச்சர்கள் / தூதுவர்கள் சந்திப்பு ஏற்பாடுகளையும் ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் இசைவுடன் பொதுத்துறை மேற்கொள்கிறது.

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் 02.08.2021 முதல் 06.08.2021 வரை தமிழகத்திற்கு வருகை புரிந்தார். அவ்வருகையின்போது, தமிழ்நாடு சட்டமேலவை நூற்றாண்டு விழாவில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின்

திருவுருவப்படத்தைத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் 02.08.2021 அன்று திறந்து வைத்தார். மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் அவர்கள் 29.06.2021 முதல் 02.07.2021 வரை தமிழகத்திற்கு வருகை புரிந்தார். கடந்த மே மாதம் 2021 முதல் 31.08.2021 வரை டேனிஷ் நாட்டைச் சேர்ந்த அயல்நாட்டுத் தூதுவர், பல்வேறு நாடுகளைச் சார்ந்த 11 அயல்நாட்டுத் துணைத் தூதுவர்களும், கப்பற்படையினைச் சார்ந்த உயர் அதிகாரி, கடலோரக் காவற்படையைச் சார்ந்த 2 உயர் அதிகாரிகளும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துள்ளனர்.

## 3. அரசு விருந்தினர் இல்லங்கள்

பொதுத்துறையின் கட்டுப்பாட்டில் அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை; புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை; அரசு ஓய்வு இல்லம் சிந்தாதிரிப்பேட்டை, சென்னை; தமிழகம் அரசு விருந்தினர் இல்லம், உதகமண்டலம்; வைகை தமிழ்நாடு இல்லம், புது டெல்லி; பொதிகை தமிழ்நாடு இல்லம், புது டெல்லி ஆகிய அரசு விருந்தினர் இல்லங்கள் செயல்படுகின்றன.

### 3.1 அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை

அரசு விருந்தினர் இல்லம் 7 அறைகளுடன் 1970–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1983 ஆம் ஆண்டு கூடுதல் கட்டடங்கள் பழைய விருந்தினர் இல்லத்தின் அருகே கட்டப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது. அரசு விருந்தினர் இல்லத்தில் 33 அறைகளில் 6 தொகுப்பு அறைகள், 11 சொகுசு அறைகள், 16 நிலையான அறைகள் உள்ளன. மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள வரவேற்பு அலுவலர் (இணை மாநில மரபு அலுவலர்) இவற்றின் நிருவாகத்தைப் பொறுப்பேற்று நடத்துகின்றார்.

## 3.2 புதிய விருந்தினர் இல்லம், ஓமந்தூரார்அரசினர் தோட்டம், சென்னை

புதிய விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை, 2018–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இவ்வில்லத்தில் 40 சொகுசு அறைகள், 4 சிறிய கூட்டரங்கம், 2 பெரிய கூட்டரங்கம், 2 உணவு அருந்தும் அறை, நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைந்துள்ளன. மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள வரவேற்பு அலுவலர் (இணை மாநில மரபு அலுவலர்) இவற்றின் நிருவாகத்தைப் பொறுப்பேற்று நடத்துகின்றார்.

அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம் ஆகிய விருந்தினர் இல்லங்களில் அரசு விருந்தினர் மற்றும் தொகைதரு விருந்தினர் தங்குவதற்கு www.sgh.tn.gov.in என்னும் இணையத்தின் வலை தளப்பக்கத்தின் வாயிலாக முன்பதிவினைச் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 3.3 அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை

சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள அரசு ஓய்வு இல்லம், சென்னைக்கு வருகைபுரியும் இளநிலை அரசு

அலுவலர்கள் தங்குவதற்காக 25 அறைகளுடன் 1981–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அக்கட்டடம் மிகவும் பழுதடைந்ததால், பிப்ரவரி, 2021–ல் இடிக்கப்பட்டு, புதிய அரசு ஓய்வு இல்லம் கட்டுவதற்கான பணிகள் நடைபெறுகின்றன.

மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள வரவேற்பு அலுவலரின் (இணை மாநில மரபு அலுவலர்) கட்டுப்பாட்டில் அரசு விருந்தினர் இல்லம், புதிய அரசு விருந்தினர் இல்லம் ஆகியவற்றில் மொத்தம் 89 அலுவலர்கள் 24 மணி நேரமும் சுழற்சி முறையில், சீரான செயல்பாடு, விருந்தோம்பல் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் பணியாற்றி வருகின்றனர்.

### 3.4 தமிழகம் அரசு விருந்தினர் இல்லம்,உதகமண்டலம்

இவ்விருந்தினர் மாளிகை, முன்பு ஜோத்பூர் மகாராஜாவினுடைய அரண்மோர் அரண்மனை என்று பெயர் கொண்ட மாளிகையானது, மிகவும் இரம்மியமான சூழலில் அமைந்துள்ளது. 1958–ம் ஆண்டு இந்த அரண்மனை தமிழக அரசால் வாங்கப்பட்டது. இவ்விருந்தினர் மாளிகை உதகமண்டலம் இரயில் நிலையம், மத்திய பேருந்து நிலையத்திலிருந்து 2.8 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. இம்மாளிகை 39

அறைகளுடன் (8 முக்கிய விருந்தினர் அறைகள், 29 அறைகள், 2 விடுதி அறைகள்) 36 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இவ்விருந்தினர் மாளிகையில் 200 பேர் அமரக்கூடிய அழகிய அவைக்கூடமும் 30 பேர் அமரக் கூடிய சிறிய அவைக் கூடமும் உள்ளன. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பல்வேறு குழுக்களின் ஆய்வுக் கூட்டங்கள், கருத்தரங்கங்கள் அவைக் கூடத்தில் நடத்தப்படுகின்றன.

இம்மாளிகையில் அறைகள் ஒதுக்கீடு செய்வது தொடர்பான ஆணைகள் இத்துறையால் வெளியிடப்படுகிறது. தமிழகம் விருந்தினர் மாளிகையில் வட்டாட்சியர் நிலையிலுள்ள வரவேற்பு அலுவலரின் கட்டுப்பாட்டில் 13 நிரந்தரப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

### 3.5 வைகை – தமிழ்நாடு இல்லம், புது டெல்லி

வைகை–தமிழ்நாடு இல்லம், புது டெல்லியிலுள்ள சாணக்யபுரி கௌடில்யமார்க் எண் 6–ல் 1.757 ஏக்கர் நிலத்தில் 1962–ஆம் ஆண்டு கட்டப்பட்டது, அதன் தொடர்ச்சியாக, 1976–ஆம் ஆண்டு மூன்று அடுக்குமாடியுடன் கட்டப்பட்டது. வைகை–தமிழ்நாடு இல்லத்தில் 7 சொகுசு அறைகளும் 40 அறைகளும் உள்ளன. இவ்வில்லத்தில் வரவேற்பு, உணவகம்,

இல்லக் காப்பகம், மின்சாரம், குடிநீர், குளிர்சாதனம் போன்றவற்றை பராமரிக்கும் அனைத்து முக்கியச் சேவைகள் தமிழ்நாடு இல்லத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களால் செயல்படுத்தப்படுகிறது.

### 3.6 பொதிகை–தமிழ்நாடு இல்லம், புது டெல்லி

பொதிகை–தமிழ்நாடு இல்லம், புது டெல்லியிலுள்ள சாணக்யபுரி திக்கேந்தரஜித் மார்க், எண் 9–ல் 1.966 ஏக்கர் பரப்பளவில், 16.09.2004–இல் கட்டடப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளது. இவ்வில்லத்தில் உணவகம், இல்லக் காப்பகம், பாதுகாப்பு, தோட்டப்பணிகள் அனைத்தும் தனியார் மயமாக்கப்பட்டு ஒப்பந்ததாரர்களால் செயல்படுத்தப்படுகிறது. தற்போது தமிழ்நாடு இல்ல நிருவாகக் கட்டுப்பாடு, செயல்பாடு கூடுதல் தலைமைச் செயலாளர் / உள்ளுறை ஆணையர்–I, உள்ளுறை ஆணையர்–II ஆகியோரைத் தனித்தனித் துறைத் தலைவர்களாகக் கொண்டு பொதுத்துறையின் முழுமையான கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

புது டெல்லி தமிழ்நாடு இல்லங்களில் அரசு விருந்தினர் மற்றும் தொகைதரு விருந்தினர் தங்குவதற்கு www.tnhouse.tn.gov.in என்னும் இணையத்தின் வலைதளப்பக்கத்தின் வாயிலாக

முன்பதிவினைச் செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு இல்லங்களில் வழங்கப்படும் சேவைகள்:**

- **வணிக மையம்:–** வைகை மற்றும் பொதிகை–தமிழ்நாடு இல்லத்தின் வணிக மையத்தில் செயலாக்க உதவிகளைக் கட்டண முறையில் விருந்தினர்களுக்குச் செய்து தரப்படுகிறது.
- அனைத்து விருந்தினர்கள் அறைகளிலும் கம்பியில்லாத இணையத் தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- நவீன ஒலி, ஒளி கருவிகளுடன் 90 பார்வையாளர்கள் அமரும் வசதி கொண்ட அரங்கம் பயன்பாட்டில் உள்ளது.
- பொதிகை–தமிழ்நாடு இல்லத்திலுள்ள மருத்துவ உதவி மையம் விருந்தினர்களுக்கும், அலுவலர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் குறைந்தபட்ச மருத்துவ உதவி வழங்கி வருகிறது. பொது மருத்துவர், திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் மாலை 4.30 முதல் 6.00 மணி வரை பொதிகை–தமிழ்நாடு இல்லத்தில் மருத்துவ ஆலோசனை வழங்குகிறார்.

- உள் அரங்கு உடல்நலம் மேம்பாட்டு மையம், பொதிகை–தமிழ்நாடு இல்லத்திலும், வெளி அரங்கு உடல்நல மேம்பாட்டு மையம் இரண்டு தமிழ்நாடு இல்லங்களிலும், குழந்தைகள், விருந்தினர்களுக்கான பொழுதுபோக்கு மையம் வைகை–தமிழ்நாடு இல்லத்திலும் உள்ளன.

## 3.7 அரசு விருந்தினர், தொகைதரு விருந்தினர்

### 3.7.1 அரசு விருந்தினர்

தமிழகத்திற்கு வருகைதரும் மிக முக்கிய, முக்கியப் பிரமுகர்கள் மாண்புமிகு குடியரசுத்தலைவர், மாண்புமிகு குடியரசுத் துணைத்தலைவர், மாண்புமிகு பாரதப் பிரதமர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, பிற மாநில ஆளுநர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர், முன்னாள் குடியரசுத் துணைத்தலைவர், முன்னாள் பாரதப் பிரதமர், மக்களவையின் சபாநாயகர், துணை சபாநாயகர், ஒன்றிய அமைச்சர்கள், மக்களவை மற்றும் மாநிலங்களவையின் எதிர்கட்சித் தலைவர், பிற மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள், நிதி ஆயோக் துணைத் தலைவர், பிற மாநில சபாநாயகர்கள், துணைச் சபாநாயகர்கள், இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர், ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ஆணையத்தின் தலைவர்கள் / உறுப்பினர்கள்,

அயல்நாட்டுப் பிரமுகர்கள், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், ஒன்றிய அரசின் செயலாளர்கள் ஆகிய அனைவரும் அரசு விருந்தினர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு வரவேற்பு, தங்கும் வசதி, உணவு, மருத்துவச் சேவை, தொலைபேசி கட்டணம், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. பாதுகாப்பு வசதிகள் ஒன்றிய அரசின் உள்துறை நிர்ணயித்துள்ள பட்டியலின்படி கொடுக்கப்படுகின்றன.

### 3.7.2 தொகைதரு விருந்தினர்

மரபு கையேட்டின்படி, அரசு விருந்தினர் பிரிவின் கீழ் வராதவர்கள் தொகைதரு விருந்தினர்களாக கருதப்படுவர். கட்டணம் செலுத்துதல் அடிப்படையில், தங்கும் வசதி, போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

**07.05.2021 முதல் 31.08.2021 வரை அரசு விருந்தினர் இல்லங்களுக்கு வருகை புரிந்தோர் விவரம்:**

| வ. எண். | விருந்தினர் | அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை | புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை | தமிழகம் விருந்தினர் இல்லம், உதகமண்டலம் | தமிழ்நாடு இல்லம் பொதிகை/ வைகை, புதுடெல்லி |
|---|---|---|---|---|---|
| 1. | அரசு விருந்தினர் | 09 | -- | -- | 24 |
| 2. | தொகைதரு விருந்தினர் | 154 | 212 | 580 | 620 |

# 4. அயல்நாட்டினர்

## 4.1 அயல்நாட்டினர் சட்டம், 1946

மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடும் அயல்நாட்டினர், நுழைவிசை (visa) விதிகளை மீறும் அயல்நாட்டினரை அயல்நாட்டினர் சட்டம், 1946–ன்படி, அவர்களது நாட்டிற்குத் திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளை இத்துறை மேற்கொள்கிறது.

## 4.2 'இ–சானட்' சேவைத் திட்டம்

மாநில அளவில், பொதுத்துறையானது வெளிநாடுகளில் உயர்கல்வி பயில்வதற்கு / பணிபுரிவதற்குத் தேர்வாகியுள்ள இந்தியர்களின் ஆவணங்களுக்கு சான்றளிப்பு வழங்குகிறது. சான்றிதழ்களின் உண்மைத் தன்மையை உரிய ஆவணம் வழங்கும் அதிகார அமைப்பிடமிருந்து சரிபார்க்கப்பட்டு இத்துறையால் முத்திரையிடப்படுகிறது. இச்சேவை இணையதளம் வாயிலாக வழங்குவதற்கு ஏதுவாக வெளியுறவுத்துறை அமைச்சகமானது, "இ–சானட்" (http://esanad.nic.in/) என்ற இணையதள முகப்பினைத் தேசிய தகவல் தொடர்பு மையம் (National

Informatics Centre) வாயிலாகத் தொடங்கியுள்ளது. "இ–சானட்" என்பது தொடர்பற்ற (Contactless), தொகையற்ற (Cashless) மற்றும் காகிதமற்ற (Paperless) முறையில் முத்திரையிடும் சேவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. இச்சேவையில் ஒரு பகுதியாகச் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை சரிபார்க்கும் நடவடிக்கை மின்னணு பரிமாற்றம் (Online) மூலம், பின்னூட்ட கருத்துத் தெரிவிக்கும் முறையுடன் (feedback Mechanism), நெறிமுறைப்படுத்தப்பட்டுச் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை சரிபார்க்கும் நடைமுறையில் கூடுதல் பொறுப்புடனும், விரைவாகவும், சிக்கலில்லாமலும் (Hassle free) குறைந்த செலவில் தீர்வு காண்பது ஆகிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

இவ்விணைய வழி சான்றளிப்பு / 'அப்போஸ்டில்' பெறுவதற்காக விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பதாரரின் ஆவணங்கள் / சான்றிதழ்கள், ஆவணம் / சான்றிதழ் வழங்கும் அமைப்புடன் (Document Issuing Authority(DIA)) மற்றும் பொது (அயல் நாட்டினர்) துறையால் (தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை) சரிபார்க்கப்பட்டுச் சான்றொப்பமிடப்பட்டு விண்ணப்பத்தாரர்களுக்கு விரைவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். தமிழகத்தில் 17 மாநில பல்கலைக்கழகங்கள், 13 நிகர்நிலை

பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்வித்துறை, அரசு தேர்வுகள் இயக்ககம், நகராட்சி நிருவாக ஆணையரகம், பதிவுத்துறை ஆகியவை "இ-சானட்" இணையதளத்தில் இணைந்துள்ளன. இவ்விணையம் வழியாக 31.08.2021 வரை 14,893 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 5. இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வும், தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலனும்

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு**

**–குறள் 734**

முதன் முதலில் 1968–ஆம் ஆண்டு இலங்கை, பர்மா, வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய தமிழ் நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள் நலன் பேணவும், வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் தனியாகத் துறை உருவாக்கப்பட்டது. இந்நிலையில் 1983–ல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாகப் பல்வேறு காலக்கட்டங்களில் 3,04,269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். இதனால் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்த இலங்கைத் தமிழர்களுக்கான நலன், நிவாரணப் பணிகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது. மேலும், 2010–ஆம் ஆண்டு முதல் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன் தொடர்பான பணிகளையும் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுச் செயல்படுத்தி வருகிறது.

தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.08.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி, இலங்கை அகதிகள் முகாம் என்பதை "இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்" எனப் பெயர் மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

### 5.1 முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன்

31.07.2021–ஆம் நாளிட்ட புள்ளி விவரங்களின்படி, 18,944 குடும்பங்களைச் சேர்ந்த 58,822 நபர்கள் மாநிலத்தில் உள்ள 29 மாவட்டங்களில் (திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள இரண்டு சிறப்பு முகாம்கள் உட்பட) 108 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஒன்றிய அரசு, மாநில அரசின் வழிகாட்டுதல்கள், நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளின்படி இருப்பிடம், குடிநீர், மின்சாரம், பல்வேறு நிவாரண உதவிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு வழி செய்யும் விதமாக ஒன்றிய அரசு வழங்கும் உதவிகளை மேம்படுத்தி தமிழ்நாடு அரசு வழங்குகின்றது. அதுமட்டுமின்றி, தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்கு வழங்கப்படுவது போன்று அனைத்துச்

சமூக நலத் திட்டங்களையும் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுப்படுத்தியுள்ளது. இதற்கான முதல் ஆணை 20.11.2009–ல் வெளியிடப்பட்டது.

**5.1.1 பணக்கொடை**

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்குக் குறைந்தபட்ச வாழ்க்கை பாதுகாப்பு நிதியாக மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த பணக்கொடை, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110–இன் கீழ் 27.08.2021 அன்று அளிக்கப்பட்ட அறிவிப்பின் வாயிலாகக் கீழ்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக ரூ.21.49 கோடி செலவாகும்.

| வ.எண் | விவரம் | பழைய தொகை (ரூ) | புதிதாக உயர்த்தப்பட்ட தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | குடும்பத் தலைவர் | 1,000/– | 1,500/– |
| 2. | ஒவ்வொரு கூடுதல் உறுப்பினர் (12 வயது, அதற்கு மேல்) | 750/– | 1,000/– |
| 3. | சிறியவர்கள் (12 வயதிற்கு உட்பட்டவர்கள்) | 400/– | 500/– |

**5.1.2 துணிமணிகள்**

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்குக் கோ–ஆப்டெக்ஸ் மூலம் ஒவ்வொரு வருடமும் இலவச துணிமணிகளும், இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இலவச போர்வைகளும் வழங்கும் திட்டத்தில் ஒன்றிய அரசு நிர்ணயித்த விலையில் துணிமணிகள் வாங்கி வழங்க இயலாத நிலையில், நடப்பு ஆண்டிற்குப் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் குடும்பம் ஒன்றிற்கு ரூ.1,790/–லிருந்து ரூ.3,473/–ஆக உயர்த்தி வழங்கப்படும் என்றும், இதற்கான கூடுதல் செலவினமாக அரசிற்கு ஆண்டொன்றுக்கு ரூ.3 கோடி செலவு ஆகும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

**5.1.3 பாத்திரங்கள்**

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள ரூ.250/– மதிப்பில் 8 வகையான சமையல் பாத்திரங்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக வழங்க இயலாத நிலையில், ரூ.1,296/– மதிப்பில் சேலம் இந்திய உருக்காலை நிறுவனம் மூலம்

உயர்த்தப்பட்ட வீதத்தில் பாத்திரங்கள் வழங்கப்படும் என்றும் இதனால் அரசுக்கு ரூ.1.97 கோடி கூடுதலாகச் செலவினம் ஏற்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

### 5.1.4 அரிசி மானியம்

முகாம் வாழ் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு மாதந்தோறும் பெரியவர்களுக்கு 12 கிலோ மற்றும் 8 வயதிற்குட்பட்ட சிறியவர்களுக்கு 6 கிலோ வீதம் அரிசி வழங்கப்படுகின்றது. இதில் முதல் 20 கிலோ அரிசி இலவசமாகவும் கூடுதலான அரிசி கிலோ ஒன்றிற்கு ரூ.0.57க்கும் வழங்கப்படுகின்றது. ஏற்கனவே வழங்கப்பட்ட அரிசிக்கான மானியத்தை இரத்து செய்து அவர்கள் பெறும் முழு அரிசி அளவும் விலையில்லாமல் வழங்கப்படும் என்றும், இதற்கான செலவுத்தொகையான ரூ.19 இலட்சத்தையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது. மேலும், சர்க்கரை, எண்ணெய் போன்ற இதர அத்தியாவசியப் பொருள்கள் மானிய விலையில் பொது விநியோகத் திட்டம் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

### 5.1.5 விலையில்லாச் சமையல் எரிவாயு, அடுப்பு மற்றும் மானிய விலையில் எரிவாயு உருளை வழங்குதல்

முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மிகக்குறைந்த அளவிலேயே உள்ளது. பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தின் கீழும் இவர்களுக்கு எரிவாயு இணைப்புப் பெற இயலாத நிலை உள்ளது. எனவே, ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு இணைப்பு, இலவச அடுப்பு வழங்கப்படும் என்றும், இதற்காக அரசிற்கு ஒருமுறை செலவினம் ரூ.7 கோடி ஆகும் என்றும், அதனைத் தவிர குடும்பத்திற்கு 5 எரிவாயு உருளை வீதம் ரூ.400/– மானியத் தொகை ரூ.3.8 கோடி ஆண்டுதோறும் வழங்கப்படும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

### 5.1.6 வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகள்

திண்டுக்கல் மாவட்டத்தில் தனியார் நிலங்களில் அமைக்கப்பட்டு இருந்த அடியனுத்து, தோட்டனுத்து மற்றும் கோபால்பட்டி இலங்கைத் தமிழர்கள் முகாம்களை ஒருங்கிணைத்து, கூவனுத்து கிராம அரசு

நிலத்தில் 321 வீடுகளுடன் புதிய முகாம் அமைத்திட ரூ.17.17 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த சில ஆண்டுகளாக முறையான அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வரக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்கு, இனி பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்துத் தருவதை உறுதிசெய்ய அவர்கள் தங்கியிருக்கும் முகாம்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றும், அவ்வாறு நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், இலங்கைத் தமிழர்களது முகாம்களில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7,469 வீடுகள் ரூ.231.54 கோடி செலவில் புதிதாகக் கட்டித்தரப்படும் என்றும், இதில் முதற்கட்டமாக 3,510 புதிய வீடுகள் கட்டுவதற்கு ரூ.108.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும், முகாம்களில் உள்ள மின் வசதி, கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

### 5.1.7 இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதி

ஆண்டுதோறும் இதர அடிப்படை வசதிகளைச் செய்து தர ஏதுவாக இலங்கைத் தமிழர் வாழ்க்கைத்தர மேம்பாட்டு நிதியாக ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110–இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

### 5.1.8 செலவினம் மீளப்பெறுதல்

முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளுக்கான மொத்த செலவினமும், முதலில் மாநில அரசால் செலவிடப்படுகிறது. பின்னர், மாநில தலைமை கணக்காயர் வழங்கும் தணிக்கைச் சான்றிதழின் அடிப்படையில், செலவு ஈடு செய்ய கருத்துருக்கள் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகின்றன. 2020–2021–ஆம் நிதி ஆண்டில் மாநில அரசால் ரூ.124.61 கோடி செலவிடப்பட்டுள்ளது, இதில் ஒன்றிய அரசின் பங்கு தொகையான ரூ.67.07 கோடியில், ரூ.20 கோடி பெறப்பட்டுள்ளது. மீதத்தொகை ரூ.47.07 கோடி பெறுவதற்கான கருத்துருவும் ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 5.1.9 கல்வி உதவித் தொகை

இலங்கைத் தமிழர் முகாம்களில் 12–ஆம் வகுப்பு வரை 11,012 மாணவர்கள் படிக்கின்றனர். இவர்களுக்கும் 12–ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர, தமிழ்நாட்டில் உள்ள மற்ற மாணவர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று இலவச சீருடைகள், மதிய உணவு, புத்தகங்கள், இலவச பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டு வருகின்றன.

இத்துடன், மேற்படிப்பிற்காகத் தகுதியின் அடிப்படையில் இலங்கைத் தமிழ் மாணவர்கள் கலை, அறிவியல் கல்லூரிகளிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் ஒற்றைச் சாளர முறையில், பொதுப்பிரிவின் கீழ்க் கலந்தாய்வில் கலந்துகொண்டு, சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர் நல விடுதிகள், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் நல விடுதிகளில், தேவையின் அடிப்படையில் தலா 5 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களில், ஆண்டொன்றுக்குத் தோராயமாக, 750 மாணவர்கள் அரசு, பிற கல்லூரிகளில் கலை, அறிவியல், பட்டயம் உள்ளிட்ட தொழிற்படிப்புகள் படித்து வருகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

| **வரிசை எண்** | **படிப்பு** | **கல்வி உதவித் தொகை ரூ.** | **தற்போது உயர்த்தப்பட்ட கல்வி உதவித் தொகை ரூ.** |
|---|---|---|---|
| 1. | தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு | 2,500/– | 10,000/– |
| 2. | இளநிலை கலை, அறிவியல் | 3,000/– | 12,000/– |
| 3. | இளநிலை தொழில் சார்ந்த படிப்புகள் | 5,000/– | 20,000/– |

மேலும், பொறியியல் படிப்புப் பயிலுவதற்குத் தேர்ச்சிபெற்ற மாணவர்களில் மதிப்பெண் அடிப்படையில், முதல் 50 மாணவர்களுக்கு, அனைத்துக் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் ஆகியவற்றை அரசே

ஏற்கும் என்றும், மேலும், வேளாண் / வேளாண் பொறியியல் பட்டப் படிப்பிலும் மதிப்பெண் அடிப்படையில் முதல் 5 மாணவர்களுக்கு மேற்சொன்ன கல்வி, விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக் கொள்ளும் என்றும், அதுமட்டுமின்றி முதுநிலை பட்டப்படிப்புப் பயிலும் அனைத்து முகாம்வாழ் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் கல்வி, விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக் கொள்ளும் என்றும், இதற்காக, ஆண்டுதோறும் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110–இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

### 5.1.10 சமூக மேம்பாட்டுத் திட்டங்கள்

#### 5.1.10.1 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

#### 5.1.10.2 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண உதவித்திட்டம்

இலங்கைத் தமிழர்கள் குடும்பத்தைச் சேர்ந்த மகளிருக்கும் நீட்டிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

### 5.1.10.3 மகளிர் சுய உதவிக் குழு

தமிழ்நாட்டில் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களில் 321 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அவர்தம் பொருளாதாரம், வாழ்க்கைத்தரம் மேலும் உயர ஏதுவாகச் சமுதாய முதலீட்டு நிதியாகத் தலா ரூ.50,000/- வழங்கப்பட்டுள்ளது.

மேலும், முகாம்களில் உள்ள 300 சுய உதவிக்குழுக்களுக்கு தொழில்கள் செய்ய ஏதுவாகச் சுழல் நிதி, சமுதாய முதலீட்டு நிதியாக, ஒவ்வொரு சுய உதவிக்குழுவுக்கும் தலா ரூ.1.25 இலட்சம் வழங்கப்படும் என்றும், அதுமட்டுமின்றி கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 321 சுயஉதவிக் குழுக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ரூ.50,000/- உடன் மேலும், ரூ.75,000/- வழங்கப்படும் என்றும், இதற்காக ரூ.6.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110-இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

### 5.1.10.4 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் மற்றும் துயர்துடைப்பு

மாதாந்திரப் பணக்கொடை மட்டுமில்லாமல், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு அவர்களில்

மிகவும் நலிந்தோரைக் கருத்திற்கொண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்களில் தங்கியுள்ள ஆதரவற்ற விதவைப் பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட, மணமாகாத பெண்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ.1,000/– வழங்கப்படுகிறது. முகாம்வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்தில் இறப்பு ஏதும் ஏற்படின், அவ்வாறு இறந்த நபர்களின் குடும்பங்களுக்கு, இறுதிசடங்குகள் செய்திட ரூ.5,000/– வழங்கப்படுகிறது. மேலும், விபத்தின் காரணமாக இறப்பு ஏதும் ஏற்பட்டால், அவர்கள் குடும்பத்திற்கும் முதலமைச்சரின் இலங்கை தமிழர்களின் சிறப்பு நிவாரண நிதியிலிருந்து ரூ.50,000/– உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

### 5.1.11 முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு கோவிட்–19 நிவாரண உதவியாக ரூ.4,000/– வழங்குதல்

இந்த அரசு புதிதாகப் பதவியேற்ற பிறகு, தமிழ்நாடு அரசின் கோவிட் நிவாரண உதவித் தொகை ரூ.4,000/– வீதம் முகாம்களில் வசிக்கும் 18,944 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டது. இதற்காக, ரூ.7.58 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், 14 விதமான மளிகைப் பொருள்கள் (ரூ.465/–

விலையில்) அடங்கிய பை முகாம்களில் வசிக்கும் 18,944 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் ரூ.88.08 இலட்சம் செலவில் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

### 5.1.12 திறன் மேம்பாட்டுப் பயிற்சி

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்கள் தங்களது வேலைவாய்ப்புத் தகுதியினை உயர்த்திக்கொள்ளவும் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக 5,000 முகாம்வாழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110–இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

### 5.1.13 சிறப்புமுகாம்

தற்போது தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தலா ஒரு சிறப்பு முகாம் உள்ளது. இம்முகாம்களில் குற்ற பின்னனி கொண்ட / விசாரணையில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 31.07.2021–இன் நிலவரப்படி

88 இலங்கைத் தமிழர்கள் வெளிநாட்டினர் சட்டம் 1946 – பிரிவு 3 (2) (இ)–ன் கீழ் சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய நடமாட்டம் சிறப்பு முகாம்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், இவர்களுக்குத் தினமும் ரூ.175/– மதிப்பில் சமைத்த உணவு அளிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

### 5.1.14 இலங்கைத் தமிழர்கள் சொந்த விருப்பத்தில் நாடு திரும்புதல்

தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்பும் இலங்கைத் தமிழர்களுக்கு "வெளிச்செல் அனுமதி" தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்படுகிறது. 2002–ஆம் ஆண்டு முதல் 31.03.2020 வரை UNHCR உதவியுடன் 17,718 நபர்கள் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.

## 5.2 முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள் நலன்

31.07.2021 அன்றைய நிலவரப்படி, 13,553 குடும்பங்களைச் சேர்ந்த 34,087 இலங்கைத் தமிழர்கள், தமிழ்நாட்டில் உள்ளூர் காவல் நிலையங்களில் பதிவு செய்து கொண்டு முகாமிற்கு வெளியே வாழ அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### 5.2.1 முகாமிற்கு வெளியே வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு கோவிட்–19 சிறப்பு நிவாரண உதவியாக ரூ.4,000/– வழங்குதல்

இந்த அரசு புதிதாகப் பதவியேற்ற பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காவல் நிலையத்தில் பதிவு செய்து வெளிப்பதிவில் வசித்து வரும் 13,553 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் ரூ.4,000/– வழங்கிடும் திட்டம் 19.06.2021 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இதற்கான செலவினம் ரூ.5.42 கோடி ஆகும்.

### 5.2.2 மிகைத்தங்கல் காலத்திற்கான அபராத தொகை தள்ளுபடி செய்தல்

இலங்கைத் தமிழர்களுக்கான விசா கட்டணம், மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகையானது ஒன்றிய அரசால் கணிசமாக உயர்த்தித் திருத்தியமைக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கைத் தமிழர்களில் சிலர் அதிகமான தொகை செலுத்தி மீள இலங்கைக்குத் திரும்ப இயலாத நிலை இருந்தது. சுயவிருப்பத்தின் பேரில் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவிக்கும் இலங்கைத் தமிழர்களின் கோரிக்கையின் மீது, விசா கட்டணம், மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகையினை இனம்வாரியாகத் தள்ளுபடி செய்ய மாநில அரசுக்கு ஒன்றிய அரசால் ஒப்புதல்

வழங்கப்பட்டு, மேற்படி விசா, அபராதத் தொகைகள் தள்ளுபடி செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 31.07.2021–இன் நிலவரப்படி 805 குடும்பங்களைச் சார்ந்த 1,542 இலங்கைத் தமிழர்கள் பயனடைந்துள்ளனர்.

### 5.3 ஆலோசனைக் குழு

முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும், வெளிப்பதிவில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் உரிய உதவிகளை வழங்கிடவும், அடிப்படை வசதிகள் மேம்படுத்திடவும், குடியுரிமை வழங்குதல், அவர்களில் இலங்கைக்குத் திரும்புவோர்க்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் போன்ற நீண்ட காலத்தீர்வினைக் கண்டறிய ஏதுவாக மாண்புமிகு சிறுபான்மையினர் நலன், வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், பொதுத்துறை செயலாளர், மறுவாழ்வுத்துறை இயக்குநர், பிற அரசு உயர் அலுவலர்கள், அரசு சாரா உறுப்பினர்கள், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதி, வெளிப்பதிவில் வசிக்கும் இலங்கைத் தமிழர் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு ஆலோசனைக்குழு அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110-இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

**5.4 தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு**

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த, சுமார் 4,61,639 நபர்கள் இலங்கையிலிருந்தும், 1,44,445 நபர்கள் பர்மாவிலிருந்தும், 2,055 நபர்கள் வியட்நாமிலிருந்தும் தாயகம் திரும்பியுள்ளனர். இவர்களில், பெரும்பான்மையினர் தமிழ்நாட்டிலும், மற்றவர்கள் கர்நாடகா, கேரளா, ஆந்திரா மாநிலங்களிலும் குடியமர்ந்துள்ளனர். இவர்களுக்குத் தமிழ்நாடு அரசு பல நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது.

**5.4.1 பசுமை வீடுகள்**

2018-2019-ஆம் ஆண்டில் "சூரிய மின் சக்தியுடன் கூடியப் பசுமைவீடுகள்" திட்டத்தின் கீழ் கிராமபுறங்களில் 1,000 வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, 840 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 160 வீடுகளில், அடித்தளம்-31, லின்டெல்-34, தளம்-60, பூச்சு வேலை -35 என்கிற பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்றுவருகிறது.

### 5.4.2 அனைவருக்கும் வீடு

2019–2020–ஆம் ஆண்டில் "அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ் பேரூராட்சி மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் தாயகம் திரும்பியோருக்கு மொத்தம் 500 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவற்றில், 413 வீடுகள் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இதுவரை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக 6 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 103 வீடுகளில் கட்டுமானப்பணிகள் பல்வேறு நிலைகளில் (அடிதளம்–36, லின்டெல்–24, தளம்–43) நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 5.4.3 தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி (REPCO BANK)

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி (REPCO BANK) இலங்கை, பர்மா, வியட்நாம், பிறநாட்டிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக ஒன்றிய அரசால் நிறுவப்பட்டு; ஒன்றிய அரசு, தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய 5 தென்மாநில அரசுகளின் பங்கு மற்றும் தாயகம்

திரும்பியோர் பங்கு ஆகியவற்றை முதலீடாகக் கொண்டு இயங்கிவருகிறது.

இந்த வங்கி முதன்முதலில் மெட்ராஸ் கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 53/1961–ன்கீழ் 09.09.1969 அன்று பதிவு செய்யப்பட்டது. மேலும், வங்கியின் நடவடிக்கைகள் 19.11.1969–ல், முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் துவக்கப்பட்டது. இந்த வங்கி ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்தின் FFR பிரிவின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயல்பட்டு வருகிறது. தற்பொழுது, இவ்வங்கி தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளாவிலும் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலுமாக 108 கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது. 31.03.2021 வரையிலான வங்கியின் மூலதனத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

| வ. எண். | முதலீட்டாளர்கள் | மூலதனத் தொகை (இலட்சங்களில்) | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | இந்திய அரசு | 7632.00 | 49.46 |
| 2. | தமிழ்நாடு அரசு | 713.00 | 4.62 |
| 3. | ஆந்திரப்பிரதேச அரசு | 104.77 | 0.68 |

| | | | |
|---|---|---|---|
| 4. | தெலுங்கானா அரசு | 74.88 | 0.49 |
| 5. | கேரள அரசு | 61.16 | 0.40 |
| 6 | கர்நாடக அரசு | 17.47 | 0.11 |
| 7. | தாயகம் திரும்பியோர் | 6827.63 | 44.24 |
| | மொத்தம் | **15430.91** | **100.00** |

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுமார் 1,56,000 தமிழின மக்கள் இலங்கையிலிருந்தும், சுமார் 1,44,000 தமிழின மக்கள் பர்மாவிலிருந்தும் இந்தியாவிற்குத் தாயகம் திரும்பியுள்ளனர். ஆரம்பகாலக் கட்டத்தில் அவர்கள் தேயிலை மற்றும் இரப்பர் தோட்டங்களில் மறுவாழ்விற்காகக் குடியேற்றப்பட்டனர். அவர்களுக்கு நூற்பாலைகள் மற்றும் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பிற்கான பல திட்டங்களை இந்த வங்கியின் துணை கொண்டு தமிழ்நாடு அரசு செயல்படுத்தி உள்ளது.

தற்பொழுது, இவ்வங்கி தாயகம் திரும்பியோர்க்குக் கல்வி உதவித் தொகை, மருத்துவ உதவித் தொகை, குறைந்த வட்டியில் கடன் திட்டங்கள், ஆயுள் காப்பீட்டுத் திட்டம், இழப்பீட்டுத் தொகை (இறுதி சடங்கிற்காக), 10 மாணவர்களுக்கான உயர்கல்வி செலவு ஏற்பு, தாயகம் திரும்பிய குழந்தைகள் பயிலும்

பள்ளிகளுக்குத் தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரம் வழங்குதல், பழுதடைந்த வீடுகளின் சீரமைப்பு, மாற்றுத் திறனாளிகளுக்குச் சிறப்பு இருக்கை அளித்தல் போன்ற பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதுவரை சுமார் ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட தாயகம் திரும்பியோர் இந்தத் திட்டங்களின் மூலம் பயன் பெற்றுள்ளனர். தாயகம் திரும்பியோருக்கு இந்தக் கூட்டுறவு வங்கியின் மூலம் செய்யப்பட்ட உதவித் தொகைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| வ.எண். | வருடம் | உதவித் தொகை ரூ. (இலட்சங்களில்) |
|---|---|---|
| 1. | 2016-17 | 470.00 |
| 2. | 2017-18 | 484.00 |
| 3. | 2018-19 | 618.00 |
| 4. | 2019-20 | 720.00 |
| 5. | 2020-21 | 475.00 |

## 5.5 வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்

தமிழர்கள் வணிகத்தின் பொருட்டும், குடியமர்வின் பொருட்டும் தொன்றுதொட்ட காலம் முதல் அயல் நாடுகளுக்குச் சென்றுள்ளனர். வருடந்தோறும்,

பொருளாதார மேம்பாடு அடையும் பொருட்டு அதிக எண்ணிக்கையிலான தமிழர்கள் வாழ்வாதாரத்திற்காகவும், பணி நிமித்தமாகவும், மேற்கல்வி காரணமாகவும் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். வெளிநாடு வாழ் தமிழர்களின் நலனுக்காக இந்த அரசானது வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள், ஒன்றிய அரசின் உதவியுடன், பல்வேறு இன்னல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மருத்துவச் செலவுகள், துயரமடைந்த புலம்பெயர்ந்தோரை மீள அழைத்து வருதல் மற்றும் வெளிநாடுகளில் இறந்த தமிழர்களின் பூத உடல்களை இந்தியாவிற்குக் கொண்டு வருதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) "மாவட்ட நல அலுவலர் (வெளிநாடு வாழ் தமிழர்கள்)" ஆகவும், ஆட்சியர் அலுவலகத்தில் தலைமை மேலாளர் (குற்றவியல்) அவர்களின் பொறுப்பின் கீழ் உள்ள பிரிவானது "மாவட்ட நல மையம் (வெளிநாடு வாழ் தமிழர்கள்)" ஆகவும் செயல்பட்டு, மேற்படி பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### 5.5.1 சுழல் நிதி

வெளிநாடு வாழ் தமிழர்களின் நலனுக்காக இந்த அரசானது வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள், ஒன்றிய அரசின் உதவியுடன், பல்வேறு இன்னல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு, மருத்துவச் செலவுகள், துயரமடைந்த புலம்பெயர்ந்தோரை மீள அழைத்து வருதல் மற்றும் வெளிநாடுகளில் இறந்த தமிழர்களின் பூத உடல்களைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. வெளிநாடு வாழ் தமிழர்கள் நலனுக்குச் செலவிடுவதற்காகச் சுழல் நிதியாக ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை அரசு பின்னர் ஈடு செய்கின்றது.

இத்தொகையிலிருந்து 2020–2021–ஆம் ஆண்டில், வெளிநாடுகளில் இறந்த 74 தமிழர்களின் பூத உடல்கள் கொண்டு வரப்பட்டு, இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊர்திகள் மூலம் அவர்களது சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக 2020–2021–ஆம் நிதியாண்டில் ரூ.2.07 கோடி சுழல் நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது.

### 5.5.2 வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம் அமைத்தல்

கொரோனா தொற்றுக் காரணமாக வேலை இழந்த சுமார் 6,36,540 நபர்கள் "வந்தே பாரத்" திட்டத்தின் மூலம் விமானம் மூலமாகத் தமிழகம் திரும்பியுள்ளனர். அவர்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்திட ஏதுவாக வெளிநாடு வாழ் தமிழர் நலச்சட்டம் 10(1)–ல் குறிப்பிட்டுள்ளவாறு "வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம்" உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காணும் நலவாரியம் தற்சமயம் இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகத்தில் ஓர் அங்கமாக இயங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 6. முன்னாள் படைவீரர்கள் நலன்

**பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்**
**ஊராண்மை மற்றதன் எஃகு**

**–குறள் 773**

முப்படையில் பணிபுரிந்து கொண்டிருந்த வீரர்களின் பணியினைப் போற்றவும், ஓய்வுபெற்ற வீரர்களின் நலன் காக்கவும் முதன்முதலில் மெட்ராஸ் தரைப்படைவீரர் வாரியம் 1919–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு, அதற்கான தேவைகள் முடிக்கப்பட்ட நிலையில் 1930–ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. மீண்டும் 1943–ஆம் ஆண்டு அப்போதைய இந்திய அரசால் மெட்ராஸ் மாகாண தரைப்படை, கப்பற்படை, விமானப்படை வாரியங்கள் புனரமைக்கப்பட்டபோது மெட்ராஸ் தரைப்படை வீரர் வாரியமும் புனரமைக்கப்பட்டது.

1956–ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாநில தரைப்படை, கப்பற்படை, விமானப்படை வீரர்கள் வாரியம் எனவும், பின்னர் 1969–ஆம் ஆண்டில் "தமிழ்நாடு மாநில முப்படை வீரர்கள் வாரியம்" எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாரியம், மாண்புமிகு ஆளுநர் அவர்களைப் புரவலராகவும், மாண்புமிகு முன்னாள் படைவீரர் நல அமைச்சர்

அவர்களைத் தலைவராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

1974–ல் தமிழ்நாடு முப்படை வீரர்கள் வாரியம் மற்றும் மெட்ராஸ் தொகுப்பு நிதி அலுவலகம் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு முன்னாள் படைவீரர் நல இயக்குநரகம் உருவாக்கப்பட்டுச் சமூக நலத்துறையின் நிருவாகக் கட்டுபாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. 1976–ல் முன்னாள் படைவீரர் நல இயக்குநரகம் பொதுத்துறையின் நிருவாகக் கட்டுபாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. இத்துறையின் நிருவாகச் செலவுகள் ஒன்றிய, மாநில அரசுகளால் 60:40 என்ற பங்கீட்டு விகிதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்திய இராணுவத்திற்கு இளைஞர்களை அனுப்புவதில் தமிழ்நாடு பெருமளவில் பங்களித்து வருகிறது. முன்னாள் படைவீரர்கள், படைப்பணி புரிவோர் மற்றும் படைப்பணியில் இறந்தோர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு உதவிடும் வகையில் அரசு வகுக்கும் கொள்கைகளையும், திட்டங்களையும் முன்னாள் படைவீரர் நல இயக்ககம் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 2,500 படைவீரர்கள் ஒவ்வொரு ஆண்டும் படைப்பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். முன்னாள் படைவீரர் நல

இயக்ககத்தில் 1,27,654 முன்னாள் படைவீரர்கள் மற்றும் 55,570 கைம்பெண்கள் என மொத்தம் 1,83,224 நபர்கள் பதிவு செய்துள்ளனர். முன்னாள் படைவீரர்கள், அவர்களைச் சார்ந்தோரின் தேவைகளும், கோரிக்கைகளும் 30 மாவட்ட அலுவலகங்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

6.1 **முன்னாள் படைவீரர் நலத்துறையின் முக்கியத் திட்டங்கள் / நிதியுதவி கீழ்வருமாறு:–**

(1) தமிழ்நாடு அரசுத் திட்டங்கள்/ நிதியுதவிகள்

(2) துறை சார்ந்த திட்டங்கள்/ நிதியுதவிகள்

- கொடிநாள் நிதி
- தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி
- தொகுப்பு நிதி

**6.2 தமிழ்நாடு அரசுத் திட்டங்கள் / நிதியுதவிகள்**

**6.2.1 வீரதீர செயல்களுக்கான விருது, போற்றத்தக்க பணிக்கான பதக்கம் பெற்றவர்களுக்கான பண முடிப்பு**

வீரதீர செயல்களுக்கான வீர பதக்கங்கள், போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கான பதக்கங்களைப் பெற்றவர்களுக்கு

அரசால் பணமுடிப்பு வழங்கப்படுகிறது. 2021–2022–ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், வீரப்பதக்கம், போற்றத்தக்க பணிக்காகப் பதக்கம் பெற்ற 2 வீரர்களுக்கு ரூ.2 இலட்சம் பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் பிராந்திய இராணுவத்தில் பதக்கம் பெற்றவர்களில் ஒரு வீரருக்கு ரூ.4,000/–என 8 வீரர்களுக்கு மொத்தம் ரூ. 32,000/– வழங்கப்பட்டுள்ளது.

### 6.2.2 போரில் உயிர் நீத்தோருக்கான கருணைத் தொகை

போர், சிவில் நிருவாகத்திற்கு உதவிடும் நடவடிக்கையின் போது உயிரிழந்த / ஊனமுற்ற படைவீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையிலும், அவர்தம் குடும்பத்தினரின் துயர் நீக்கிடும் வகையிலும் ரூ.20 இலட்சம் வரை கருணைத் தொகை அரசால் வழங்கப்படுகிறது. மேலும், கருணைத் தொகை தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவப்படையினருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. உயிரிழந்த படைவீரர்களின் வாரிசுதாரர் ஒருவருக்கு ரூ.20 இலட்சம் வீதம் மொத்தம் 4 வாரிசுதாரர்களுக்கு ரூ.80 இலட்சம், 2021–2022–ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

### 6.2.3 கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு

படைப்பணியில் உயிர்நீத்தோர், போர், போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்தவர்தம் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. 2021–2022–ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில் 6 நபர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

### 6.2.4 போர்ப் பணி ஊக்க மானியம்

தமது ஒரே மகன்/ மகளைப் படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோர்களைக் கௌரவிக்கும் வகையில் ஒரு முறை மட்டும் ரூ.20,000/– மற்றும் வெள்ளிப் பதக்கமும், ஒன்றுக்கு மேற்பட்ட மகன் / மகளைப் படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ஒரு முறை மட்டும் ரூ.25,000/– தொகையுடன் வெள்ளிப் பதக்கமும் வழங்கப்படுகிறது.

### 6.2.5 மறு வேலை வாய்ப்பு அளித்தல்

முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் அவர்தம் இளம் வயதில் பல ஆண்டுகள் திறமையான பணிக்காலத்தினை மீதமாகக் கொண்டு படைப் பணியிலிருந்து விலகுவதால், அவர்களுக்கு மறு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், தமிழ்நாடு

அரசிலும், அரசுச் சார்ந்த துறைகளில் வழங்கப்படும் இட ஒதுக்கீடுகள் பின்வருமாறு:–

| வ.எண். | விவரம் | இட ஒதுக்கீடு சதவீதம் |
|---|---|---|
| 1. | பிரிவு "சி" பணியிடங்கள் | 5 |
| 2. | அரசிலும், அரசுச் சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் பணியிடங்கள் | 10 |
| 3. | வனக்காவலர் பணியிடங்கள் | 10 |
| 4. | வனப்பாதுகாவலர் பணியிடங்கள் | 5 |
| 5. | தேசிய மாணவர் படை அலுவலகங்களில் இலஸ்கர், ஓட்டுநர், இரவுக் காவலர்கள் பணியிடங்கள் | 25 |
| 6. | சீருடைப் பணிப் பிரிவில் பிரிவு "சி" பணியிடங்கள் | 5 |
| 7. | கால்நடை ஆய்வாளர் | 5 |

2021–2022–ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், அரசு / அரசு சார்ந்த / வங்கிகள் மற்றும் தனியார் நிறுவணங்களில் "சி" பிரிவில் 19 நபர்களும், "டி" பிரிவில் 8 நபர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 6.2.6 இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தொகுப்பு மானியம்

தமிழ்நாட்டிலிருந்து இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கவும்,

இராணுவப் பணிப் பயிற்சி காலத்தின்போது ஏற்படும் செலவினங்களை எதிர்கொள்ள தொகுப்பு மானியம் (Lumpsum Grant) கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:–

| வ. எண். | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | முப்படையில் நிரந்தர படைத்துறை அலுவலர் (Permanent Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் ( NDA / IMA / Naval / Air Force Academy) முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | 1,00,000/– |
| 2. | முப்படையில் குறுகியகாலப் படைத்துறை அலுவலர் (Short Service Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | 50,000/– |
| 3. | இராணுவத்தில் இளநிலை படை அலுவலர்கள், இதர பதவிகளின் (Junior Commissioned Officer and Other Ranks) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | 25,000/– |

2021–2022–ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், 6 முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு ரூ.3.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 6.2.7 பதினைந்து ஆண்டு கால இராணுவப் பணியினைப் பட்டதாரி கல்விக்கு இணையாகக் கருதுதல்

பத்தாம் வகுப்புத் தேர்ச்சிப் பெற்று இராணுவத்தில் பதினைந்து ஆண்டு காலம் பணியாற்றிய முன்னாள்

படைவீரர்கள் மறுவேலை வாய்ப்பிற்கு சிவில் பிரிவில் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டப்படிப்பிற்கு நிகரான பட்டமாகக் கருதிட தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

இவ்வாணையினால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசு நிறுவனங்களில் பட்டப்படிப்புத் தகுதிகளுக்கான "சி" பிரிவு பணியிடங்களுக்கு முன்னாள் படைவீரர்களைத் தேர்வு செய்ய வழிவகை செய்கிறது.

### 6.2.8 இரு குடும்ப ஓய்வூதியம்

இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்று மறு வேலைவாய்ப்பின் மூலம் தமிழ்நாடு அரசில் சிவில் பணியாற்றிய முன்னாள் படைவீரரின் வாரிசுதாரருக்கு, இராணுவக் குடும்ப ஓய்வூதியத்துடன் சிவில் பணிக்கான குடும்ப ஓய்வூதியமும் சேர்த்து இரு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இரு குடும்ப ஓய்வூதியம் தொடர்பான 129 விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 99 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

### 6.2.9 கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு

பல்வேறு கல்வி நிலையங்களில் உயர் கல்விக்கு (மருத்துவ / பொறியியல் உட்பட) முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

| வ. எண். | கல்வி பாடப்பிரிவு | இட ஒதுக்கீடு எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | பொறியியல் (அண்ணா பல்கலைக்கழகம் –பொது) | 150 | |
| 2. | பொறியியல் (அண்ணா பல்கலைக்கழகம் – Lateral Entry) | 15 | |
| 3. | மருத்துவம் | 10 | |
| 4. | பல் மருத்துவம் | 1 | |
| 5. | பி.எஸ்சி., (செவிலியர்) | 4 | |
| 6. | செவிலியர் பட்டயப் படிப்பு | 60 | |
| 7. | ஆசிரியர் பயிற்சி | 132 | ஒவ்வொரு பயிலகத்திலும் 3 இடங்கள் |
| 8. | ஆசிரியர் (இளங்கலை) படிப்பு | – | ஒவ்வொரு அரசுக் கல்லூரியிலும், அரசு உதவி பெறும் கல்லூரியிலும்–1 இடம் |

| | | | |
|---|---|---|---|
| 9. | பி.எஸ்சி., (விவசாயம்) | 6 | |
| 10. | பொறியியல் (விவசாயம்) | 1 | |
| 11. | பி.எஸ்சி., (தோட்டக்கலை) | – | ஒவ்வொரு அரசு தொழில் நுட்பப் பயிலகத்திலும் தலா 1 இடம் |
| 12. | தொழில் நுட்பப் பட்டயப் படிப்பு | 80 | |
| 13. | தொழில் பயிற்சிப் பயிலகம் (ITI) | – | ஒவ்வொரு அரசு பயிலகத்திலும் தலா 5 இடங்கள் |
| 14. | இளங்கலை சட்டப் படிப்பு(3/5ஆண்டுகள்) | 1 சதவீதம் | |
| 15. | இளங்கலை பி.ஏ., / பி.எல்., (Hons) | 1 சதவீதம் | |
| 16. | இளங்கலை பட்டப் படிப்பு | – | ஒவ்வொரு கல்லூரியிலும் 6 இடங்கள் |

### 6.2.10 கோயில் பாதுகாப்புப் படை

தமிழக கோயில்களிலுள்ள சிலைகள், நகைகள், உண்டியல் சேகரிப்புகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்களைப் பாதுகாப்பதற்காகக் கோயில் பாதுகாப்புப்

படை நிறுவப்பட்டு, மாதந்தோறும் ரூ.7,300/- தொகுப்பூதியத்தில் 974 முன்னாள் படைவீரர்கள் கோயில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

### 6.2.11 தேர்தல் பாதுகாப்புப் பணி

நாடாளுமன்றம் / சட்டமன்றம் / உள்ளாட்சி மன்றத் தேர்தல்களின் போது பாதுகாப்புப் பணியில் இருக்கும் காவல்துறையினருக்கு உதவிடும் வகையில் முன்னாள் படைவீரர்கள் தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் பயன்படுத்தப்படுகின்றனர். இவ்வகையில் சுமார் 10,000 முன்னாள் படைவீரர்கள் ஒவ்வொரு தேர்தலின்போதும் மதிப்பூதியம் அடிப்படையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

### 6.2.12 கோவிட்-19 பாதுகாப்புப் பணி

கோவிட்-19 பாதுகாப்புப் பணிக்காக 2,537 முன்னாள் படைவீரர்கள் சிறப்பு நேர்வாக மதிப்பூதியம் அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### 6.3 கொடிநாள் நிதி

இந்நிதி மாண்புமிகு ஆளுநர் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு கொடிநாள் நிலைக் குழுவினால் நிருவகிக்கப்படுகிறது. மாண்புமிகு முன்னாள்

படைவீரர் நல அமைச்சர் அவர்கள் இக்குழுவின் துணைத்தலைவர் ஆவார்.

முன்னாள் படைவீரர்களுக்கு, திருமணம், தொழில், குடியிருப்பு, மருத்துவம் தொடர்பான மானியங்கள், சிறார்களுக்கான கல்வி மேம்பாட்டு நிதியுதவி, பயிற்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குதல் ஆகியவற்றை நிறைவேற்றிட கொடிநாள் நிதி திரட்டப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7–ம் நாள் முதல் அதற்கடுத்த ஆண்டின் டிசம்பர் 6–ம் நாள்வரை கொடி நாள் நிதி வசூல் செய்யப்படுகிறது. கொடிநாள் நிதி வசூல் மூலம் பெறப்படும் நிதியானது, தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி, தொகுப்பு நிதி ஆகிய இரு நல நிதிகள் மூலம் முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்கான நல திட்ட உதவிகளைச் செயல்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கொடிநாள் வசூல் நிதி இலக்கின் 5% தொகுப்பு நிதிக்கும், எஞ்சிய வசூல் தொகை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. 2020–2021–ஆம் ஆண்டில் 31.07.2021 வரை ரூ. 14.68 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

படைவீரர் கொடி நாள் நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு, வருமான வரிச் சட்டம், 1961–ன்

பிரிவு எண். 80G (5) (vi) ன் கீழ் வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் படைவீரர்களுக்கான நலத்திட்டங்கள், சலுகைகள் பற்றிய விரிவான விவரங்களை உள்ளடக்கிய கொடிநாள் மலர் தமிழ், ஆங்கில மொழிகளில் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 6,76,98,000 ஆகும். மத்திய முப்படை வாரியத்தின் கடித எண்.532 (5) கே.எஸ்.பி/டி, நாள்.02.03.2021–ன்படி குடிமகனுக்கு ஒரு காசு வீதம் கணக்கீடு செய்து ஒன்றிய அரசின் பங்குத் தொகையாக 2017 முதல் 2020 வரையில் ஆண்டுக்கு ரூ. 6,76,980/– வீதம் நான்கு ஆண்டுகளுக்கு ரூ.27,07,920/– மத்திய முப்படை வாரியத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது.

### 6.4 தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

மாண்புமிகு முன்னாள் படைவீரர் நல அமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முப்படைவீரர் வாரியம் செயல்படுகிறது. இவ்வாரியத்தில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் புரவலர் ஆவார். மேலும், அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் துணைத்தலைவர்

ஆவார். ஒன்றிய / மாநில அரசுத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

முன்னாள் படைவீரர் நலத்துறையின் இயக்குநர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தமிழ்நாடு முப்படைவீரர் வாரியத்தின் உட்குழுவான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக் குழு செயல்படுகிறது.

கொடிநாள் வசூல் இலக்கின் 5% தொகுப்பு நிதிக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது போக, வசூலிக்கும் மீதத் தொகை, வைப்பு நிதியின் வட்டி, சொத்துகளிலிருந்து பெறப்படும் உரிமக் கட்டணம் ஆகியவை இந்நிதியின் நிதி ஆதாரமாகும்.

முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் இரண்டாம் உலகப்போர் நிதியுதவி, ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி, பல்வேறு வகையிலான மருத்துவ நிதியுதவிகள், திருமண நிதியுதவி, செயற்கை உபகரணங்களுக்கான நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவிகள் போன்றவை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலநிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

## 6.4.1 தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் பல்வேறு நிதியுதவிகள் பின்வருமாறு:–

| வ. எண். | நிதியுதவியின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| **அ) மாதாந்திர நிதியுதவி** | | |
| 1. | இரண்டாம் உலகப்போர் (முன்னாள் படைவீரர்) நிதியுதவி | 10,000/– |
| 2. | உலகப்போர் (கைம்பெண்கள்) நிதியுதவி | 4,000/– |
| 3. | முதியோர் நிதியுதவி | 4,000/– |
| 4. | தொழுநோய் /காசநோயாளிகளுக்கான நிவாரணம் / மாற்றுத் திறனாளிகளுக்கான நிவாரணம் | 5,000/– |
| 5. | பக்கவாத நிவாரணம் / பார்வையற்றோருக்கான நிவாரணம் / புற்றுநோய் நிவாரணம் / மனவளர்ச்சிக் குன்றியச் சிறார்களுக்கான நிவாரணம், மனநோய் கொண்ட முன்னாள் படைவீரரின் மனைவி, கைம்பெண்களுக்கான நிவாரணம் | 7,000/– |
| **ஆ) இதர நிதி உதவிகள்** | | |
| 1. | திருமண மானியம் (இரண்டு மகள்கள்) | 25,000/– |
| 2. | ஈமச்சடங்கு மானியம் (முன்னாள் படைவீரர்களுக்கு) | 10,000/– |
| 3 | ஈமச்சடங்கு மானியம் (கைம்பெண்கள்) | 7,000/– |

இரண்டாம் உலகப் போர் முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி 2021–2022–ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், 91 முன்னாள் படைவீரர்களுக்கும், 2,555 கைம்பெண்களுக்கும் என 2,646 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.5.28 கோடி இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2021–2022–ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், 6,483 முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்கும் இந்நிதியிலிருந்து பல்வேறு நிதியுதவியும் மானியங்களும் மொத்தம் ரூ.12.20 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 6.4.2 இராணுவ ஆட்சேர்ப்பு முகாம்

இராணுவ ஆட்சேர்ப்பு முகாமிற்கு மாவட்ட நிருவாகம் மூலம் மேற்கொள்ளப்படும் செலவினத்திற்காக ஒரு முகாமிற்கு ரூ.6 இலட்சம் வீதம் ஆண்டிற்கு ஐந்து முகாம்களுக்கு ரூ.30 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

### 6.4.3 முன்னாள் படைவீரர், அவர்களைச் சார்ந்தோரில் மகளிருக்கான திறன்மேம்பாட்டுப் பயிற்சி

முன்னாள் படைவீரர், அவர்களைச் சார்ந்தோருக்குத் தையற்பயிற்சி அளிப்பதற்காக வேலூர், கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில்

தையல் அலகு செயல்பட்டு வருகிறது. இத்தையல் அலகுகளில் முன்னாள் படைவீரர்கள் அவர்தம் குடும்பங்களைச் சார்ந்த படைவீரர்களின் கைம்பெண்கள் / மனைவி / திருமணமாகாத மகள் / திருமணமாகாத சகோதரிகள் / கைம்பெண் மகள் / விவாகரத்தான மகள்/ விவாகரத்தான சகோதரிகள் ஆகியோருக்கு ஆறு மாத காலத் தையற் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சிப் பெறுபவர்களுக்குப் பயிற்சி உதவித் தொகை நாளொன்றுக்கு ரூ.50/–ம், கச்சாப் பொருள் வழங்குவதற்கு மாதம் ரூ.1,000/–ம் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடித்தவர்களுக்கு ஒரு விலையில்லா தையல் இயந்திரமும் வழங்கப்பட்டு வருகிறது.

### 6.4.4 தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சியில் தேர்ச்சிப் பெறுபவர்களுக்கான உதவித்தொகை

முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் தட்டச்சு, சுருக்கெழுத்துப் போன்ற தொழில்நுட்பப் பயிற்சியில் தேர்ச்சிப் பெறுபவர்களுக்கு

வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

| வ.எண். | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | தமிழ், ஆங்கிலம் தட்டச்சு (கீழ்நிலை) | 3,000/- |
| 2. | தமிழ், ஆங்கிலம் தட்டச்சு (மேல்நிலை) | 5,000/- |
| 3. | தமிழ், ஆங்கிலம் சுருக்கெழுத்து, தட்டச்சு (கீழ்நிலை) | 7,000/- |
| 4. | தமிழ், ஆங்கிலம் சுருக்கெழுத்து, தட்டச்சு (மேல்நிலை) | 10,000/- |

### 6.4.5 வீடு கட்டும் மானியம்

முன்னாள் படைவீரர்கள், அவர்தம் கைம்பெண்கள் (அவில்தார் படைத்தரம் வரையில்) வீடு கட்டுவதற்கு / வாங்குவதற்குப் பெறும் கடன் தொகைக்கு ரூ. 1 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

### 6.4.6 படைவீரர் மாளிகை / முன்னாள் படைவீரர் மையம் / முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்

நலத் திட்டங்களுக்கான நிதிகளைத் திரட்டும் வகையில், படைவீரர் மாளிகை-10, முன்னாள் படைவீரர் மையம்-20 மற்றும் முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்-1 ஆகியவை முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளன. இதன் மூலம்

கிடைக்கும் வருவாய், நல நிதியில் சேர்க்கப்படுகிறது. 2021–2022–ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், இச்சொத்துகள் மூலம் ரூ. 72,43,084/– வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 6.4.7 மின் ஆளுமைத் திட்டம்

முன்னாள் படைவீரர் நலத்துறையில் தேசியத் தகவல் மையத்தின் மூலம் மின் ஆளுமைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. முன்னாள் படைவீரர்கள், அவர்தம் குடும்பத்தைச் சார்ந்த கைம்பெண்களின் அனைத்து ஆவணங்களும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் ஒரு பணியாளர் நியமனம் செய்யப்பட்டு மின் ஆளுமையில் மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்படும் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ்க் கணினியில் நேரடியாகப் பதிவு செய்தல், அடையாள அட்டை வழங்குதல், முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் கல்லூரியில் சேர்வதற்கான சார்ந்தோர் சான்று வழங்கல், முன்னாள் படைவீரர்களின் வேலைவாய்ப்பிற்கான பதிவுகள் மின் ஆளுமை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 6.5 தொகுப்பு நிதி

தொகுப்பு நிதி மாண்புமிகு ஆளுநர் அவர்களைத் தலைமையாகக் கொண்ட மாநில மேலாண்மைக் குழுவால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முன்னாள் படைவீரர் நல அமைச்சர், அரசு தலைமைச் செயலாளர், தென்மண்டல இராணுவத் தளபதி ஆகியோர் இக்குழுவின் துணைத் தலைவர் ஆவார்கள். இந்நிதியின் நிலையான உட்குழு அரசு தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது. கொடிநாள் நிதி இலக்கின் 5% மற்றும் வைப்பு நிதியின் வைப்புத் தொகையின் வட்டி ஆகியவை இந்நிதியின் நிதி ஆதாரம் ஆகும்.

இந்நிதியிலிருந்து போரில் உயிர் நீத்தோர் குடும்பத்தினர் மற்றும் போரில் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதுடன் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ்ப் பெறும் வங்கி கடன்களுக்கு வட்டி மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கான கல்வி மானியம் ரூ.500/– முதல் ரூ.25,000/– வரை பள்ளிக் கல்வியிலிருந்து முதுகலைக் கல்வி, தொழில்நுட்பக் கல்விக்கும் வழங்கப்படுகிறது. 2021–2022–ஆம் நிதியாண்டில்

முதல் நான்கு மாத காலத்தில், 2,197 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு இந்நிதியிலிருந்து ரூ.4.02 கோடி நிதியுதவிகள் / மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.5.1 சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள்

முன்னாள் படைவீரர்கள் பயனடையும் வகையில் சுயவேலைவாய்ப்பினை அதிகரித்திட அரசு முனைப்பாக உள்ளது. சுய வேலை வாய்ப்பிற்காகப் பெறப்படும் ரூ. 10 இலட்சம் வரையிலான வங்கி கடன்களுக்கு 75% வட்டி மானியமும், சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15 இலட்சம் வரையிலான வங்கிக் கடன்களுக்கு 100% வட்டி மானியமும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 2021-2022-ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், இத்திட்டங்களின் மூலம் 221 முன்னாள் படைவீரர்களுக்கும், 4 சுய உதவிக் குழுக்களுக்கும் ரூ.20,37,150/- மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## 6.5.2 தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் பல்வேறு நிதியுதவிகள் பின்வருமாறு:–

| வ. எண். | நிதியுதவியின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | போரில் வீர மரணம் அடைந்தோரின் வாரிசுதாரர்களுக்குக் கருணைத் தொகை | 1,00,000/– |
| 2. | போரில் ஊனமுற்றோருக்குக் கருணைத் தொகை | 50,000/– |
| 3. | போரில் வீர மரணம் அடைந்தோர், 50%க்கு மேல் ஊனமுற்றோரின் மகள்களுக்குத் திருமண நிதியுதவி | 1,00,000/–, 8 கிராம் தங்கம் |
| 4. | போரில் 50% க்கு கீழ் ஊனமுற்றோரின் மகள்களுக்குத் திருமண நிதியுதவி | 50,000/– , 8 கிராம் தங்கம் |
| 5. | கல்வி உதவித் தொகை (பள்ளி கல்வி முதல் தொழிற் கல்வி வரையில்) | 500/– முதல் 25,000/– வரை |
| 6. | போரில் வீர மரணம் அடைந்தோர்/ ஊனமுற்றோருக்கு வீடு கட்ட மானியம் | 50,000/– |

## 7. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)

தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ), 1956–ஆம் ஆண்டின் நிறுவன (கம்பெனிகள்) சட்டத்தின்படி 28.01.1986 அன்று பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. இக்கழகமானது, முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்துள்ள முன்னாள் படைவீரர்களைப் பல்வேறு ஒன்றிய, மாநில அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், ஏனைய வாரியங்களில் பாதுகாப்புப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், எழுத்தர்கள், தொலைபேசி இயக்குபவர், சுற்றுலாக் காவலர்கள், செவிலிய உதவியாளர்கள், தீயணைப்பாளர்கள், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள், காப்பாளர்கள் நிலையில் பணியமர்த்தக் கோரும் பணியிடங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி மறுவேலைவாய்ப்பு வழங்கும் "**மனித வள முகமையாக**" செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் மூலம், ஒன்றிய, மாநில அரசுத் துறைகள், ஏனையப்

பொதுத்துறை நிறுவனங்கள், வாரியங்களில் 31.07.2021 நிலவரப்படி 6,429 பாதுகாவலர்கள், 932 ஓட்டுநர்கள், 21 எழுத்தர்கள், 15 தொலைபேசி இயக்குபவர்கள், 44 துப்பாக்கி ஏந்தியக் காவலர்கள், 8 செவிலியர் உதவியாளர்கள் ஆக மொத்தம் 7,449 முன்னாள் படைவீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதில் 1,329 முன்னாள் படைவீரர்கள் ஒன்றியப் புனரமைப்புத் தலைவர் ஊதிய விகிதத்திலும் (14% சேவை கட்டணம்), 6,120 முன்னாள் படைவீரர்கள் தமிழ்நாடு குறும ஊதிய விகிதத்திலும் (12% சேவை கட்டணம்), பணியமர்த்தப்பட்டுள்ளனர். இது தற்சார்பு பெற்ற இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாகும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மானக் கழகம், கோரியதன் அடிப்படையில் "**மின் திருட்டுத்தடுக்கும் படை**" அமைக்கப்பட்டுத் தனித்திறன் வாய்ந்த 215 முன்னாள் அவில்தார்கள், முன்னாள் இளநிலை படைப்பணி அலுவலர்கள் நிலையில் பணியமர்த்தப்பட்டு, ரூ.204.52 கோடி அளவிற்கு மின் திருட்டுத் தடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, தமிழ்நாடு சுற்றுலாத் துறை கோரியதற்கிணங்க **"சுற்றுலா பாதுகாப்புப் படை"** அமைக்கப்பட்டு 31 சிறப்புத் தகுதி பெற்ற முன்னாள்

படைவீரர்கள் தமிழ்நாட்டிலுள்ள இராமேஸ்வரம், உதகமண்டலம், மாமல்லபுரம், கன்னியாகுமரி, கொடைக்கானல் ஆகிய ஐந்து முக்கியச் சுற்றுலா தளங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்திற்கு ரூ.19.19 கோடி செலவில் 760.16 சதுர மீட்டர் பரப்பளவில் நிலம் வாங்கப்பட்டு, 15,708.98 சதுர அடியில் புதிய அலுவலகக் கட்டடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு வருகிறது.

**7.1 இதர நலத்திட்டங்கள்**

முன்னாள் படைவீரர்களின் நலன் கருதி தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் கீழ்காணும் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

- 4,848 முன்னாள் படைவீரர்களுக்கு ரூ. 69 இலட்சம் செலவில் தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- **"விபத்துக் காப்பீட்டுத் திட்டம்"**தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணியமர்த்தப்பட்ட அனைத்துப் பணியாளர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டு, இறந்தவரின் வாரிசுதாரர்களுக்கு

இத்திட்டத்தின் கீழ் ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது.

- "**தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நல நிதித் திட்டம்**" தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்காக ஆண்டுக்குத் தோராயமாக ரூ.2.76 கோடியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- "**முழு உடல் பரிசோதனை திட்டம்**" தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் அனைத்துப் பணியாளர்களுக்கும் தலா ரூ.3,000/- தொகுப்பின் கீழ் அரசு மருத்துவமனை மூலம் முழு உடல் பரிசோதனை செய்யும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது. 31.07.2021 வரை, 1,987 முன்னாள் படைவீரர்கள் இத்திட்டத்தின் கீழ்ப் பயனடைந்துள்ளனர்.

# 8. மாநில மனித உரிமைகள் ஆணையம்

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்**

–குறள்–972

1993–ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காகத் தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையம், 1997–ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு மாண்புமிகு தலைவர், மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையம் துவங்கப்பட்ட முதல் ஆண்டில் 2,162 புகார் மனுக்கள் பெறப்பட்டன. அடுத்தடுத்த ஆண்டுகளில் புகார் மனுக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து, 2020–ஆம் ஆண்டில் மட்டும் 11,998 புகார்கள் பெறப்பட்டுள்ளன. பொது மக்களிடம் மனித உரிமைகள் குறித்து ஏற்பட்டுள்ள விழிப்புணர்வே இதற்குக் காரணமாக அமைந்துள்ளது. 1997–ஆம் ஆண்டு துவங்கி, 2021–ஆம் ஆண்டு சூலை திங்கள் வரை, 2,22,674 புகார்கள் பெறப்பட்டு, அவற்றில் 1,94,453 புகார்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

இவ்வாணையத்தின் நோக்கம், செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கத்தோடு, சட்டம், உளவியல், குற்றவியல் மற்றும் மனித உரிமைகள்

குறித்த கல்வி, பாடங்கள் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு, தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தில், நிலையப்பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

ஆண்டுதொறும் டிசம்பர் திங்கள் 10–ஆம் நாள் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகிறது. அந்நாளில், மனித உரிமைகள் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு ஆணையத்தால் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன மேலும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்களால் இதர அலுவலர்கள் பணியாளர்களுடன் மனித உரிமைகள் தின உறுதி மொழி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

கோவிட்–19 பெருந்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தமிழக அரசின் நிலையான வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றவும், சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளதாலும், பொது மக்கள், குறிப்பாகப் பெண்கள், கர்ப்பிணிகள், முதியோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் ஆணையத்திற்கு நேரில் வந்து புகார் அளிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, இயங்கலை (on–line) மூலமாகப் புகார் அளிக்கும் வசதியை 07.12.2020 முதல் ஆணையம் ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் 31.08.2021 வரை ஆணையத்திற்கு 1316 புகார்கள் பெறப்பட்டுள்ளன.

## 9. தேசிய விழாக்கள், சிறப்பு நாள்கள், விருதுகள்

இந்தியத் தேசிய விழாக்களான சுதந்திரத் திருநாள் மற்றும் குடியரசுத் திருநாள் ஆகிய விழாக்களைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைப் பொதுத்துறை மேற்கொள்கிறது. இத்துறையானது, ஒவ்வோர் ஆண்டும் சுதந்திரத் தின விழாவின் போது, சென்னை – தலைமைச் செயலகத்தில் உள்ள கோட்டை கொத்தளத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றும் நிகழ்ச்சிக்கான பணிகளையும், குடியரசு தின விழா அன்று சென்னைக் கடற்கரையில், முப்படைகளும் உள்ளடக்கியச் சீருடைப் படையினரின் அணிவகுப்போடு பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகளின் ஆடல், பாடல் மற்றும் பல்வேறு மாநிலங்களின் கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் கலைநிகழ்ச்சிகளுடன் ஆளுநர் அவர்களால் கொடியேற்றி வைக்கும் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்கிறது.

ஒன்றிய அரசால் சிறப்பு நாளாக அறிவிக்கப்பட்டுள்ள தியாகிகள் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலக அலுவலர்கள் அனைவருக்கும் உறுதிமொழியேற்புச்

செய்து வைக்கும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

### 9.1 தகைசால் தமிழர் விருது

இந்த ஆண்டு முதல் சுதந்திரத் திருநாள் விழாவின் போது, தமிழ்நாட்டுக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் "தகைசால் தமிழர் விருது" வழங்கப்படுகிறது. இவ்விருதினைப் பெறும் விருதாளருக்கு ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான "தகைசால் தமிழர்" விருது திரு. என். சங்கரய்யா அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும், மாநில அரசின் விருதுகளான, வீர தீரச் செயலுக்கான "அண்ணா பதக்கம்", துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான "கல்பனா சாவ்லா விருது" ஆகிய விருதுகளுக்கு தகுதியுடைய நபர்களைத் தெரிவு செய்யும் பணியிலும் பொதுத்துறை முக்கிய பங்காற்றுகிறது. இது தொடர்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைச் செயலாளர்கள் ஆகியோரிடமிருந்து விவரங்கள் பெறப்பட்டு, விருது பெறுவோரைத் தெரிவு செய்யும் தேர்வுக் குழுவிற்கு (Selection Committee) அனுப்பும் பணியினை இத்துறை மேற்கொள்கிறது. தமிழ்நாடு அரசு,

மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்டு உயிர்நீத்த திரு.கோட்டை அமீர் அவர்களின் பெயரால் **'கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம்'** என்ற பதக்கத்தினை 2000–ஆம் ஆண்டில் தோற்றுவித்து, ஆண்டுதோறும் மத நல்லிணக்கத்திற்காகச் சிறந்த சேவையாற்றி வரும் ஒருவருக்குக் குடியரசுதின விழாவில், இப்பதக்கம் பெறுபவர்களுக்குப் பதக்கமும், ரூ.25,000/–ற்கான கேட்புக் காசோலையும் மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாகத் தகுதியான நபர்களைத் தெரிவு செய்யும் பணி பொதுத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசால் வழங்கப்படும் தேசிய விருதுகளான பாரத ரத்னா, பத்மவிபூஷண், பத்மபூஷண், பத்மஸ்ரீ, சர்தார் படேல் தேசிய ஒற்றுமை விருது, மத நல்லிணக்கத்திற்கான கபீர் புரஸ்கார் விருது, காந்தியடிகள் அமைதி பரிசு ஆகிய விருதுகளுக்கும், வீர தீரச் செயல்களுக்காக ஒன்றிய அரசால் வழங்கப்படும் விருதுகளான ஜீவன்ரக்ஷா பதக்கம், அசோக் சக்ரா, கீர்த்தி சக்ரா மற்றும் சௌர்ய சக்ரா போன்ற விருதுகளுக்கும், விருதாளர்களைத் தெரிவு செய்வது தொடர்பான பரிந்துரைகள் பொதுத்துறையின் மூலம் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

## 10. முதலமைச்சரின் தனிப்பிரிவு

முதலமைச்சரின் தனிப் பிரிவு பொது மக்களின் குறைகளுக்குப் பயனுள்ள உரிய தீர்வு காண்பதிலும், அவர்களின் இடர்பாடுகளைக் களைவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இப்பிரிவு, தனி அலுவலரின் தலைமையில் இயங்கி வருகிறது. பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் குறைகளை விரைவில் தீர்வு செய்வதை உறுதி செய்யும் பொருட்டுத் தனி அலுவலர் அரசின் அனைத்து நிலையிலுள்ள அலுவலர்களை நேரடியாகத் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளும் போதும், அலுவலகம் மற்றும் இல்லத்திலும் நேரடியாகப் பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மற்றும் முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் மனுக்கள், ஆகியவை முறையாக எண்ணிடப்பட்டு மனுதாரரின் பெயர், முகவரி, கோரிக்கையின் விவரம் மற்றும் மனுவின் நகல் ஆகியன பதிவேற்றம் செய்யப்பட்டு சம்மந்தப்பட்ட துறைகள் / மாவட்டங்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதன்பிறகு, அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையினைக் கண்காணிக்கவும், துரிதப்படுத்தவும்

முதலமைச்சரின் தனிப்பிரிவு அனைத்துத் துறைகளிலும் / மாவட்ட அலுவலகங்களில் நியமிக்கப்பட்டுள்ள பற்றாளர்களுடன் அவ்வப்போது ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, அம்மனுக்களின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உடனுக்குடன் தீர்வுகள் காணப்படுகின்றன.

## 11. உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில் பொது மக்களின் குறைகளை உடனடியாகத் தீர்வு காணும் பொருட்டு, "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற புதிய துறை 07.05.2021 அன்று உருவாக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது தேர்தல் பரப்புரையின் போது பெறப்பட்ட மனுக்கள் 100 நாள்களுக்குள் தீர்வு காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இத்துறை ஏற்படுத்தப்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட துறைக்கு இந்திய ஆட்சிப் பணி நிலையில் ஒரு சிறப்பு அலுவலர் தலைமை தாங்குகிறார். பிறதுறை மாற்றுப் பணி அலுவலர்களுடன், முதலமைச்சரின் தனிப்பிரிவு அலுவலகத்திலிருந்து பிரிவு அலுவலர், உதவி பிரிவு அலுவலர், தட்டச்சர் மற்றும் ஓர் உதவியாளர் அடங்கிய ஒரு பிரிவு "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், பெறப்பட்ட மனுக்களைப் பதிவு செய்யவும் மற்றும் தொழில்நுட்ப ஆதரவை பெறவும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நிறுவனத்திற்கு உத்தரவிடப்பட்டது.

08.05.2021 அன்று, மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் அடங்கிய பெட்டிகளின் சாவியை

மாண்புமிகு முதலமைச்சர் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் சிறப்பு அலுவலரிடம் வழங்கினார். பெட்டிகள் திறக்கப்பட்டு, கோரிக்கை மனுக்கள் மாவட்ட வாரியாக/ குறைவாரியாக (Grievance wise) பிரிக்கப்பட்டது. பின்னர், மின்னணு முறையில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் பராமரிக்கப்படும் முதலமைச்சர் உதவி மையம் இணையதள முகப்பில் மனுக்கள் பதிவேற்றப்பட்டன. தகுதியான ஒவ்வொரு மனுவும் ஓர் அட்டை / கடிதம் கூட தவறவிடாது பதிவேற்றப்பட்டது.

மே மாதத்தில் கொரோனா நோய்த்தொற்று உச்சத்தில் இருந்தபோது 200 தரவு உள்ளீடு ஆபரேட்டர்கள் (Data Entry Operators) இம்மனுக்களை இணையதள முகப்பில் பதிவேற்றம் செய்தார்கள். பெருந்தொற்று நோய் பரவல் இருந்தபோதிலும், தாமதமின்றி கள மட்டத்தில் பொறுப்பான அதிகாரிகளுக்கு மனுக்களை அனுப்ப அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. மனுக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன், ஒரு குறுஞ்செய்தி மனுதாரரின் செல்லிடப்பேசி எண்ணுக்கு ஒப்புகை எண்ணுடன் அனுப்பப்பட்டது.

மின்னணு முறையில் பதிவேற்றப்பட்ட மனுக்கள் உடனடியாக மாவட்டங்களில் பரிசீலிக்கப்பட்டு,

கள அலுவலர்களால் சரிபார்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற இத்துறையில் மனுக்கள் ஒப்படைக்கப்பட்டதிலிருந்து 10–வது நாளான 18.05.2021 அன்று, முதல் சுற்று நலத்திட்ட உதவிகள் மனுதாரர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரால் வழங்கப்பட்டன. நீண்டகாலமாக நிலுவையில் உள்ள குறைகள் சம்பந்தப்பட்ட 549 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டன.

அதன்பிறகு ஒவ்வொரு பதினைந்து நாள்களுக்கு ஒருமுறை நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் ஏழு முறையும், சேலத்தில் ஒரு முறையும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். ஒவ்வொரு மாவட்டங்களிலும் மனுதாரர்களுக்கு மாண்புமிகு அமைச்சர்களால் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இத்துறையின் செயல்பாடுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நேரடியாகக் கண்காணிக்கப்படுகிறது. குறைகளை விரைவாகத் தீர்ப்பது மட்டுமல்லாமல், மனுக்களுக்குத் தரமான

முறையில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இத்துறை உறுதியாக உள்ளது.

மனுக்களுக்குத் தீர்வு காண்பது தொடர்பாகத் தலைமைச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சரின் முதன்மை செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் செயலாளர்களால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டுத் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. காலந்தாழ்த்தாது விரைவாகவும் மனுக்களுக்கு ஏற்கத்தக்க தீர்வு காண்பதை உறுதி செய்வதற்காகத் தினசரி ஆய்வு நடத்த மாவட்ட ஆட்சியர்கள் பணிக்கப்பட்டனர்.

அனைத்துத் துறைகள் சார்ந்த மனுக்கள் நடவடிக்கை எடுக்கப்படுவது தொடர் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டு, மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு (Nodal) அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, தினசரி ஆய்வுகள் நடத்தப்பட்டன. மொத்தமாக இத்துறையின் மூலம் 4,57,645 மனுக்களுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டது. மொத்த மனுக்களில் 45 சதவீதம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையைச் சேர்ந்ததாகும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை ஆகியவை தலா 16.2 சதவீதமும், வீட்டு வசதி மற்றும்

நகர்ப்புற மேம்பாட்டுத் துறை 4.3 சதவீதமும் மற்றும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 4.2 சதவீதம் மனுக்களுக்கும் தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

ஈரோடு (40,157), கோயம்புத்தூர் (38,226), திருப்பூர் (31,227), விழுப்புரம் (26,245) மற்றும் சேலம் (4,070) மாவட்டங்கள் மிக அதிகமான மனுக்களைக் கையாண்ட முதல் ஐந்து மாவட்டங்கள் ஆகும்.

சரியான களஆய்வுக்கு பிறகு தகுதியின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட துறைகளின் அதிகாரிகளால் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு **2,29,216** மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுக் கோரிக்கைக்குத் தகுந்தாற்போல் ஆணைகள் / நலத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

சரியான கள ஆய்வுக்குப் பிறகு, மனுதாரரை கண்டுபிடிக்க / தொடர்பு கொள்ள முடியாத மனுக்கள் அல்லது குறிப்பிட்ட கோரிக்கைகள் இல்லாத மனுக்கள், நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் தொடர்பான மனுக்கள் மற்றும் தற்போது நடப்பிலுள்ள அரசு திட்டங்களின் கீழ்த் தகுதிபெறாததன் காரணமாக 2,28,429 மனுக்கள் ஏற்க இயலவில்லை. இருப்பினும், மேற்குறிப்பிட்ட மனுதாரர்கள் தேவையான விவரங்களுடன்

மாவட்ட நிருவாகத்தை அணுகினால், அவர்களின் கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

"உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை" 100 நாள்களில் 4.57 இலட்சம் மனுக்கள் மீது மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து முக்கியப் பங்கு ஆற்றியுள்ளது. வழக்கமாக 2 வருடங்களாக நடைபெறும் பணி 3 மாதத்திற்குள் முடிக்கப்பட்டுவிட்டது.

## 12. முடிவுரை

பொதுத்துறை மந்தனமான நிகழ்வுகளைக் கையாளுகிறது. எத்துறையாலும் கையாள முடியாத நேர்வுகள் பொதுத்துறையின் வசமே ஒப்படைக்கப்படுகின்றன. இத்துறை மரபுகளைப் பேணிக் காப்பதிலும், அவற்றை வழுவாமல் கடைப்பிடிப்பதிலும் மிகுந்த அக்கறை செலுத்துகிறது. மாநிலத்தின் பெருமையைக் கட்டிக் காக்கும் நம்பகத்தன்மை இத்துறையின் முக்கிய அடையாளமாகத் திகழ்கிறது. நுண்ணிய தன்மை கொண்ட அனைத்துப் பொருண்மைகளும் இத்துறையால் கையாளப்படுகின்றன. பழைய ஆவணங்களைப் பாதுகாப்பதிலும், அவற்றின் துணையோடு கோப்புகளைக் கையாளுவதிலும் நிபுணத்துவம் கொண்டது இத்துறை. பலவித நிகழ்வுகளை, பல்வேறு தரப்பட்ட நேர்வுகளைக் கையாளும் இத்துறை நிருவாகம் நிமிர்ந்து நடப்பதற்கும் நேர்கொண்ட பாதையில் செல்வதற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயல்படும் துறை.

**மு.க.ஸ்டாலின்**
**முதலமைச்சர்**